DINAKARAN

22 OCT 2022

PAGE 15

# இந்திய மருத்துவ ஆராய்ச்சி கழகத்துடன் புதுவை பல்கலை. புரிந்துணர்வு ஒப்பந்தம்



▶ புதுச்சேரி பல்கலைக்கழக துணைவேந்தர் குர்மீத்சிங் முன்னிலையில் இந்திய மருத்துவ ஆராய்ச்சி கழகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

**புதுச்சேரி, அக். 22:** புதுச்சேரி பல்கலைக்கழக உதவிபதிவாளர் மகேஷ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

புதுவை பல்கலைக் கழகம், இந்திய மருத்துவ ஆராய்ச்சி கழகத்தின் திப்ருகார், அசாம், கோரக்பூர், உத்தரப்பிரதேசம், ஜபல்பூர், மத்தியப்பிரதேசம், பாட்னா, பீகார் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள ஐசிஎம்ஆர் ஆராய்ச்சி நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. இதில் ஐந்து ஐசிஎம்ஆர் நிறுவனங்களின் இயக்குநர்களான டாக்டர் அஷ்வனி குமார், டாக்டர் கன்வர்நரேன், டாக்டர் ரஜினிகாந்த் ஸ்ரீவஸ்தவா, டாக்டர் அபரூப்தாஸ், டாக்டர் கிருஷ்ணாபாண்டே, சர்வதேச சுகாதாரம் மற்றும் மனித வள மேம்பாட்டுத்துறைத் தலைவர் டாக்டர் முகேஷ் குமார், புது டெல்லியின் ஐசிஎம்ஆர் துணை இயக்குநர் ஜெனரல் டாக்டர் லட்சுமிநாராயணன் ஆகியோர் பங்கேற்றனர். இதில் புதுச்சேரி பல்கலைக்கழக துணைவேந்தர் குர்மீத்சிங் கலந்து கொண்டு வாழ்த்தி பேசினார்.

இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ், ஐந்து ஐசிஎம்ஆர் நிறுவனங்களிலும் பொதுசுகாதார பூச்சியியல் என்ற ஒரு புதிய முதுகலை படிப்பு வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் சேரும் மாணவர்களுக்கு மாதாந்திர உதவித்தொகையாக ரூ.20 ஆயிரம் வழங்கப்படவுள்ளது.

இதன் மூலம் முனைவர் பட்டத்திற்கான இரட்டை வழிகாட்டி முறை, மாநாடுகள் மற்றும் பட்டறைகள் நடத்துதல், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பரிமாறிக்கொள்ளுதல், பல்வேறுதுறைகளில் டிப்ளமோ மற்றும் சான்றிதழ் திட்டங்களை வழங்குதல் மற்றும் கல்வி வளங்களை மேம்படுத்துதல் போன்ற செயல்திட்டங்களை அமல்படுத்த உதவும். திட்ட ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் ருக்குமணி நன்றி கூறினார்.